பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 09 வெள்ளிக்கிழமை (22-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 117

# நாச்சிக்குடா ஹெலித் தாக்குதலில் நச்சு இரசாயனக் குண்டுகள் வீச்சு?

## மீனவக் கிராமம் முற்றாக தீப்பற்றி எரிந்ததற்கு காரணம் அதுவே

லண்டன், மார்ச் 22

பூநகரி நாச்சிக்குடாவில் கடந்த சனியன்று விடிகாலை வேளை மீனவக் கிராமம் மீது தாக்குதல் நடத்திய ஸ்ரீலங்கா விமானப்படையின் ''எம். ஐ. 24'' ஹெலிக்கொப்டர்கள் அப்பகுதியில் நேபாம் ரக நச்சு — எரி— இரசாயனக் குண்டுகளை வீசியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் அந்தக் கிராமத்தில் இருந்த வீடுகளும், குடிசைகளும் மட்டுமல்லாமல் அப்பகுதியில் காணப்பட்ட மரம், செடிகள் கூட எரிந்து கருகியதற்கு இந்த வகை எரிகுண்டுகளே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 16 பேர் உயிரிழந்திருந்ததும், அறுபதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருந்ததும் தெரிந்ததே.

ஆனால்—

இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்குத் தீங்கு ஏதும் ஏற்படவில்லை என்றும்—

விடுதலைப் புலிகளே ஹெலித் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்றும் ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்து வருகின்றது.

நாச்சிக் குடாவில் இரசாயனக் குண்டுகள் வீசப்பட்டன என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் முன்னர் தாக்குதல்களின் போது பயன்படுத்தப்பட்ட பீப்பாய்க் குண்டுகள் கூட கடந்த மூன்று ஆண்டுகளாக பயன்படுத்தப்படுவதில்லை என்றும் தெரிவித்துள்ளன.

## நாச்சிக்குடா தாக்குதல் குறித்து சுதந்திரமான விசாரணை வேண்டும்

### ஜனாதிபதியிடம் கூட்டணி எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 22

பூநகரி நாச்சிக்குடாவில் கடந்த சனிக்கிழமை விடிகாலை அப்பாவிப் பொதுமக்கள் மீது ஹெலிக்கொப்டர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியமை குறித்து சுதந்திரமான விசாரணைகளை நடத்தும்படி மட்டக்களப்பு மாவட்ட எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கோரியிருக்கின்றார்.

இத்தாக்குதலில் 15 வயதுக்குட்பட்ட ஏழு சிறுவர்கள், குழந்தைகள் உட்பட 16 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் எம். பி. பரராஜசிங்கம் நேற்று இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. சாதாரணதர வகுப்புக்கள் திங்கள் முதல் ஆரம்பமாகின்றன

### ஏனைய வகுப்புக்கள் ஏப்ரலில்

சாவகச்சேரி, மார்ச் 22

வடமராட்சி, தென்மராட்சி மற்றும் இடம்பெயர்ந்த வலிகாமப் பகுதி பாடசாலைகளின் ஏனைய வகுப்புகளும் வடமராட்சி, தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

முதற்கட்டமாக ஜி. சீ. ஈ. சாதாரண தரப்பரீட்சை 1995 க்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் —

1996 டிசம்பரில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கும் — வகுப்புக்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும்.

இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தத்தமது பாடசாலைகளில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் —

பாடசாலை அதிபர் இதற்குரிய ஒழுங்குகளைச் செய்து மேற்படி வகுப்புக்களை ஆரம்பிக்குமாறும் — கோரப்பட்டுள்ளது.

ஏனைய 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 12 ஆம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சீ.ஈ. மாணவர் விவரம் பதிய கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 22

1995 ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்து தற்போது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருக்கும் பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிகள் அமெ: தூதருடன் சந்திப்பு

ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரை சந்தித்து பேச்சு நடத்த உள்ளன.

அரசியல் தீர்வு யோசனை குறித்து தாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை இந்த ஐந்து கட்சிகள் கூட்டமைப்பு அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துக் கூறும்.

முதலில் அமெரிக்கத் தூதுவரை சந்திக்கும் இக் குழுவினர் அடுத்த வாரம் ஏனைய நாட்டுத் தூதுவர்களையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்தச் சந்திப்புகளின் போது வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒரே மாகாணமாக இணைந்திருக்கவேண்டியதன் அவசியம் குறித்து இவை வலியுறுத்தும்.

ஈ. பி. டி. பி., ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ஈரோஸ், ரெலோ ஆகியவை இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. (இ-7)

### திருமலையில் மோதல்

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலைக்கு தெற்கே உள்ள பச்சனூர் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

### வால் நட்சத்திரம்

தமிழீழத்தின் கிழக்கு வான் பரப்பில் எதிர்வரும் திங்கள் செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் வால்நட்சத்திரம் ஒன்று தென்படவுள்ளது.

கியாகுடாவே என்ற இந்த வால் நட்சத்திரம் சூரியனை நோக்கிப் பயணிப்பதால் வெகு பிரகாசமாக தென்படும் என்றும், எனவே இதனை குறித்த மூன்று தினங்களும் விடி காலை 4.30 மணி முதல் 5.00 மணிவரை பருத்தித்துறை முதல் அம்பாறை வரையுள்ள மக்கள் சாதாரணமாக பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

### மட்டக்களப்பில் தமிழர்கள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் இலுப்பையடிச்சேனையில், செங்கலடி பதுளை வீதியில், நேற்று முன்தினம் இரு தமிழர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வைரமுத்து காந்தலிங்கம் (40 வயது), சூட்டி ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர். (இ-7)

### 2 படையினருக்கு தடுப்புக் காவல்

கொழும்பு, மார்ச் 22

வவுனியா சாளம்பைக்குளத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவித் தமிழர்கள் மூவரை இராணுவத்தினர் வெட்டிக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் இரு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டனர் இவர்களை தடுப்புக்காவலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

### தேங்காய் பால்மா பங்கீட்டுக்கு

சாவகச்சேரி, மார்ச் 22

இடம்பெயர்ந்த மற்றும் இடம்பெயராத மக்களுக்கு வர்த்தகத் திணைக்களத்தினால் பங்கீட்டு அடிப்படையில் தேங்காய்ப் பால்மாப் பைக்கெட் விநியோகிக்கப்பட உள்ளது.

இதற்கென ஒரு தொகுதி தேங்காய்ப் பால்மா பைக்கெட்டுக்கள் 'மாஹோ' கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குண்டுவெடிப்பில் 2 சிங்களவர் பலி

சாவகச்சேரி, மார்ச் 22

அனுராதபுரம் தந்திரிமலைக் காட்டுக்குள் மாடு மேய்க்கச் சென்ற இரு சிங்களவர்கள் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர்.

வெடிக்காத நிலையில் கிடந்த ஒரு கைக் குண்டை எடுத்து அதன் கிளிப்பை அவர்கள் கழற்றியபோது அதுவெடித்ததாகக் கூறப்படுகின்றது. (இ-ரி)

## புலிபாய்ந்தகல் முகாம் மீண்டும் மூடப்பட்டுவிட்டது

கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிபாய்ந்த கல்லில் அமைத்திருந்த படைமுகாம் மூடப்பட்டது.

ஏற்கனவே மூடப்பட்டிருந்த இந்த முகாம் கிழக்கு மாகாணத்தில் படையினர் அண்மையில் மேற்கொண்ட 'சூரிய ஒளிக் கற்றை' இராணுவ நடவடிக்கையின் போது மீண்டும் அமைக்கப்பட்டது.

எனினும் கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதை அடுத்து இந்த முகாம் தற்போது மீண்டும் மூடப்பட்டுவிட்டது. (இ-7)

## மட்டுநகரை சுற்றிவளைத்து படையினர் சோதனை

சாவகச்சேரி, மார்ச் 22

மட்டக்களப்பு நகரம் கடந்த 19 ஆம் திகதி நண்பகல் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாக தேடுதல் நடத்தப்பட்டது.

நகரின் நுழைவாயில்களான கோட்டைமுனைப்பாலம் புதுப்பாலம் ஆகியவற்றில் நின்ற இராணுவத்தினர் நகரில் இருந்து மக்கள் வெளியே செல்வதை தடுத்து நிறுத்தினர் நகருக்குள் மக்கள் புதிதாக பிரவேசிக்கவும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாடசாலை முடிந்த பின்னரும் மாணவர்கள் வீட்டுக்கு செல்ல முடியவில்லை.

இதேவேளை திருகோணமலை நகரிலும் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. வாகனங்களில் செல்லும் பொலீஸார் நகரின் மையப்பகுதிகளில் நின்றும் சோதனைகளை நடத்துகின்றனர் அத்துடன் நகரின் மையப் பகுதியில் புதிய காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளன. (இ-ரி)

## மனித உரிமை மீறல்கள் ஸ்ரீலங்காவில் அதிகரிப்பு

### அமெரிக்கா அறிக்கை

சாவகச்சேரி, மார்ச் 22

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமானபின் ஸ்ரீலங்காப்படைகளின் மனித உரிமைமீறல்கள் மேலோங்கியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலில் இருந்த போது மிகக் குறைந்தளவு மனிதஉரிமை மீறல்களே இடம்பெற்றதாகவும்—

ஆனால் யுத்தம் மீண்டும் ஆரம்பித்த பின்னர் ஸ்ரீலங்காப் படைகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் — அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முறைகேடான கொலைகள், தமிழர்கள் காணாமல் போனமை குறித்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## கடந்த பத்து நாள்களில் புலிகளின் தாக்குதல் தீவிரம்

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 22

யுத்த முனைகளில் புதிதாக பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் ஸ்ரீலங்காப் படைகள் மீது விடுதலைப் புலிகள் தொடராக நடத்தி வரும் தாக்குதல்கள், அதனால் படையினருக்கு ஏற்பட்டு வரும் பேரிழப்புகள் ஆகியன் றவை, தமது தாக்குதல் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பதையே காட்டுகின்றன.

பாதுகாப்பு வட்டாரங்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் சிங்கள— தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் பலத்தை உடைப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்திருக்கையில்—

தமது தாக்குதல்களைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

''நாங்கள் இன்னும் பல தாக்குதல்களை எதிர்பார்க்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் தையல் மெஷின் ரூ. 7000/-, சுவர் மணிக் கூடு ரூ. 600/- விற்பனைக்கு உண்டு. திருமதி வி. கமலா தேவி, C/o சண்முகநாதன், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (41188)

### தேவை

நமது வெதுப்பகத்துக்கு சகல வேலைகளும் தெரிந்த வாஸ்மாரிகள் தேவை. மற்றும் விவரங்கட்கு: நைலன் வெதுப்பகம், வியாபாரி மூலை, பருத்தித்துறை. (40364)

டாக்டருக்கு நுணாவில், சங்கத்தானை, மீசாலை இவற்றிற்கிடையில் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. பிரதான வீதியில் இருந்தால் விரும்பத்தக்கது. தொடர்பு: மெடிக்கல் சென்ரர், பஸ் நிலையம், சாவகச்சேரி. (41071)

ஆங்கிலம், சிங்களம், தமிழில் மொழிபெயர்க்கக்கூடியவர்கள் தேவை. தகைமைகளுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, தென்றல், இலக்கம் 90, யாழ். வீதி, கிளிநொச்சி. (40478)

### இலகுவில் ஆங்கிலம்

O/L 95, 96 துரிதமாக மீட்டல் முறைப்படி மாணவருக்கும் (Spoken English ஆசிரியர்களுக்கும்) பல வருட அனுபவமுள்ள B.Sc. (Cey) Inter London ஆசிரியரால் கற்பிக்கப்படும். ஆசிரியர், மே/பா சரவணமுத்து, கமலாச்சி வேதவனப்பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி. (41072)

### DISSERTATION

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய பயின்ட் செய்து கொடுக்கப்படும், குமார் அச்சகம், சிவன் வீதி. பருத்தித்துறை. (40358)

### COMPUTER CLASS

பிரத்தியேக கணனி வகுப்புக்கள்: புதிய பிரிவுகள் ஆரம்பம்: (22-03-96 / 23-03-96), 3-30 p.m. (Basic, Pascal, d Base III+, Lotus 123, C++) போதிய செய்முறைப் பயிற்சிகளுடன். தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி. (41020)

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப் பொருள்கள், மரத் தளபாடம், அலுமாரி, குசன் செற்றி உட்பட தையல் மெசின் - சிங்கர், தொலைக்காட்சிப் பெட்டி நாஷனல், T.V.S. மோட்டார் சைக்கிள், Fan. திருமதி அ. வாமதேவா, மே/பா ச. கார்த்திகேசு, கோவிலாக் கண்டி, கைதடி. (41060)

உ
குகமயம்

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் பங்குனித் திங்கள் 9ஆம் நாள் **22-03-1996** வெள்ளிக்கிழமை காலை **8-24** முதல் **9-52** வரையுள்ள இடபலக்கின சுபவேளையில் கற்பக விநாயகர், இணுவில் கந்தசுவாமியார், தான்தோன்றீஸ்வரப் பெருமாள் திருவருளோடும்

இணுவில் கந்தசுவாமி கோவில் பிரதம குரு
ஈஞ்சடி ஞானபைரவர் ஆலயம், உடுவில் கற்பக விநாயக ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ க. உருத்திரமூர்த்திக் குருக்களின்
சீமந்த புத்திரன்
**பிரம்மஸ்ரீ**
**அபராஜித சர்மாவுக்கு**

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ சிவகுமாரராஜக் குருக்களின்
கனிஷ்டபுத்திரி
**மாதினியை**

பாணிக்கிரஹண கன்னிகாதானமும் மாங்கல்ய தாரணமும் செய்வதற்கு திருவருள் கூடியுள்ளமையால் அத்தருணம் பெரியோர்கள், பந்துமித்திரர்கள் வந்திருந்து எம்மை மகிழ்வித்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் வேண்டுகிறோம்.

சமாவர்த்தனம் ] ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரப் பெருமாள் ஆலயம்
மாங்கல்யதாரணம் ] ஒட்டுசுட்டான் மாங்குளம், முல்லை வீதி.

★ இருவீட்டார் அழைப்பு ★

சிவஸ்ரீ. ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் தம்பதிகள், இணுவில்.

சிவஸ்ரீ. சிவகுமாரராஜக்குருக்கள் தம்பதிகள், குப்பிளான்.

பஸ்: கிளிநொச்சி முள்ளியவளை, கிளிநொச்சி செம்மலை.

(40479)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திரு. க. தர்மராசா

அவர்களது தயாரின் மறைவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சகோதர ஆசிரியர்கள்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
(41075)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## சின்னத்தம்பி மார்க்கண்டு நடராசா

அன்னையின் மடியில்: **08 — 02 — 1915**

வீரபத்திரர் திருவடி நிழலில் **21 — 02 — 1996**

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து எமக்கு ஆறுதலும், தேறுதலும் கூறியதுடன் உதவிகள் பல புரிந்த அனைத்து உள்ளங்கட்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 20-03-96 அன்று புதன்கிழமை கச்சாயில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (22-03-96) வேம்பிராயிலுள்ள எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் அன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். நாட்டின் நிலைமை காரணமாக எல்லோரும் இடம் பெயர்ந்து வாழ்வதால் சரியான முகவரி எமக்குக் கிடைக்கவில்லை. எனவே இவ்வறிவித்தலை அன்புடன் ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மீண்டும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொன்னம்மா நடராசா (மனைவி)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தற்காலிக முகவரி:
வேம்பிராய்ச் சந்தி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

(41187)

உ
சிவமயம்

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

ஆண்டுற்சவ

## பங்குனி (உத்தரப்) பொங்கல் 1996

**02-04-1996** செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும் இரவும், மறுநாள் **03-04-1996** புதன்கிழமை காலை வரை பங்குனி உத்தரப் பொங்கல் நடைபெறும்.

**26-03-1996** செவ்வாய்க்கிழமை விளக்கு வைக்கும் வைபவம் ஆரம்பமாகி தொடர்ந்து பொங்கல் வரை விசேட பூசைகள், அன்னதானம் அடியார்களின் நேர்த்திகளும் இடம்பெறும்.

★ சகல பாதுகாப்பு ஒழுங்குகள் விசேஷமாகச் செய்யப்பட்டுள்ளன.

★ அடியார்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து வாகன சேவை, வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

★ நாட்டுநிலை சீரின்மையால் இவ்வருடம் பண்டம் எடுக்கும் வைபவம் கோயிலடியிலேயே நடைபெறும். ஆதலால் அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை கோயிலடியிலேயே நிறைவேற்றும்படி வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை
புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்

புளியம்பொக்கணை,
பரந்தன்.
(சி-4126)

## கண்ணீர் அஞ்சலி

எமது வ. பி. போ. சபை திடீர் பரிசோதனை உத்தியோகத்தரான

## சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம்

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வட பிராந்திய
போக்குவரத்துச் சபை ஊழியர்கள்
(41190)

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C.C.A.
## 96, 97 A/L

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்பாக)

★ எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம் **01 - 04 - 96**
பி. ப. 3-00 மணி

— நிர்வாகி
(41070)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்

லாண்ட்மாஸ்ரருக்கான பெட்டி (Trailer) ஒன்று உடனடியாக தேவைப்படுகிறது. விற்பனைக்கு வைத்திருப்போர் விலையைக் குறிப்பிட்டு சீல்பண்ணிய கடித உறையில் இடதுகை மேற்பக்கமாக "கூறு விலை" எனக் குறிப்பிட்டு எமக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

— கௌரவ செயலாளர்.

வீ: எம். றோட்,
பருத்தித்துறை,
21-03-1996
(சி-4129)

யாழ்.

## சம்பந்தர் வைத்திய நிலையம்

இன்று (22-3-96) வழமையான வைத்திய சேவை ஆரம்பிக்கின்றது

இடம்:- சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன்பாக கந்தையா வீதி சந்தி.

நிர்வாகி
சு பாலன்
(41191)

# முக்கிய அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சிமன்றம்

### வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றி அமைத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்ச்சியாக நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்நகராட்சிமன்றத்தைச் சேர்ந்த, பத்து மலகூடத் தொழிலாளிகள் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து, இந்தியாவுக்குச் சென்றமையாலும், கணிசமான தொகையினர் சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறியுள்ளமையாலும், மலகூடத் தொழிலாளிகளுக்கு இந்நகராட்சிமன்றத்தில் கடும் பற்றாக்குறை நிலவுகின்றது. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, யான் காலத்துக்குக் காலம் பல வழிகளாலும் முயற்சி எடுத்தபோதும், மாற்றமடைந்து வரும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக, இவ்வேலைகளைச் செய்வதற்குப் பொருத்தமானவர்களைப் பெற முடியவில்லை. எனினும், யான் இடையறாது மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாகச் சிலரைப் பதில் தொழிலாளிகளாகத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இலவச குடியிருப்பு வசதி, ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்ற பல சலுகைகளை வழங்கி, இச்சேவை மிக்க சிரமத்தின் மத்தியிலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக, இப்பதில் தொழிலாளிகளும் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று கொண்டிருப்பதால், மலகூட சேவையை முற்றாக நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இந்நிர்வாகத்திற்கு ஏற்படக்கூடுமாகையால், இதனை ஈடு செய்யும் முகமாக, நவீன தொழில்நுட்ப ஆலோசனையுடன், வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாகக், குறைந்த செலவில் மாற்றியமைக்கும் திட்டம், என்னால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே ஐம்பதுக்கும் மேற்பட்ட வாளி மலகூடங்கள், நீரடைப்பு மலகூடங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதோடு, நூற்றுக்கும் மேற்பட்ட வரியிறுப்பாளர்கள் இவ்வேலையைச் செய்வதற்காகத், தங்கள் பெயர்களை இவ்வலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றுவதன் மூலம் நுளம்புத் தொல்லை, தொற்றுநோய் அபாயம் சுகாதாரச் சீர்கேடு முதலியவற்றைக் கணிசமான அளவு கட்டுப்படுத்தலாம் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்ட வரியிறுப்பாளர்கள் மனமுவந்து, இம்மாற்றத்தைச் செய்ய முன்வந்துள்ளதால், ஏனையோரும் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தங்கள் பெயர்களை இவ்வலுவலகத்தில் பதிந்து, அடுத்த மூன்று மாத காலத்துக்குள், இவ்வேலைகளைப் பூர்த்தி செய்யப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

க. சண்முகநாதன்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 18-3-1996.
[சி-4127]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரு முனை ஓலங்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துவிட வேண்டும் என்ற கருத்து தெற்கில் அரசியல் வட்டாரங்களில் வலுத்து வருகிறதாம்.

ஆனால் விடுதலைப் புலிகளைத் தடை செய்து பேச்சுவார்த்தைக்கான கதவுகளை ஒரேயடியாக இழுத்து மூடிவிட அரச உயர் மட்டம் விரும்பவில்லை என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆயினும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால் நிபந்தனைகளுடனேயே பேசுவது என்ற நிலைப்பாட்டை அரசு இன்னும் மாற்றிக் கொண்டதாகவும் இல்லை.

எனவே இனப்பிரச்சினைக்கு முடிவுகாணும் விடயத்தில் அரசாங்கம் மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத இக்கட்டான நிலையில் சிக்கித் தவிப்பது நன்று தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் நேர்மையாகவும், விசுவாசமாகவும் செயற்பட்டால் இந்த அவலநிலை உருவாகி இருக்கமாட்டாது.

போர் மூலம் சமாதானம் என்ற முட்டாள்தனமான, வரட்டுக் கோட்பாட்டைக் பற்றிப் பிடித்துச் சன்னதம் ஆடிக்கொண்டு அரசியல் தீர்வுகாண முடியாது என்பதனை அரசு இன்னமும் உணர்ந்ததாக இல்லை.

யாழ்ப்பாணத்தின் — வலிகாமத்தின் — மீது பெரும் படையெடுப்பை நடத்தியதில் அரசினால் அரசியல் ரீதியான தோல்வியையே அறுவடை செய்யமுடிந்தது. அதனால் கிடைத்த இராணுவ வெற்றியும் தற்காலிகமானதே என்பதனை புலிகள் வலிகாமத்தில் நாளாந்தம் நடத்தும் தாக்குதல்கள் தொட்டுக் காட்டத் தொடங்கியுள்ளன.

வடக்கில் தாக்குதல்களை நடத்துவதானால் கிழக்கில் படைப்பலம் குன்றிவிடும்; கிழக்கில் இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தினால் வடக்கில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழக்க நேரிடும். விடுதலைப் புலிகளை இரண்டு திசைகளிலும் பலவீனப்படுத்துவதற்கு இராணுவ ஆட்பலம் போதாது; நவீன போர்த் தளபாடங்கள் ஆயுதங்கள் இன்னமும் தேவை; என்று செலவினத்தை அதிகரிக்கும் வகையாறாக்களே படைத் தரப்பில் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில் சிங்கள— தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் போரில் வெற்றி கண்டுவிடப் போவதாக அமைச்சர் அனுருத்த விரப்பிரதாபம் பேசியிருக்கிறார்.

ஆனால், சந்திரிகா அரசின் ஆட்சிக் காலம் முடியும் 2000 ஒகஸ்ட் வரை, வழமை போல அவரது கால அவகாசம் தொடர்ந்து நீடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

மறுமுனையில் அமைச்சர் பீரிஸ், அரசியல் தீர்வுத் திட்டம், அரசமைப்புத் திருத்தம், தெரிவுக்குழு, சர்வசன வாக்கெடுப்பு என்று மேற்சொன்ன காலப்பகுதி வரை வாசித்துக் கொண்டேயிருப்பார்.

இவ்வாறு அடிக்கடி வாசிக்கும் பொருட்டு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான கதவை அரசு மூடிவிடவில்லை என்ற நிலைப்பாட்டை அது காட்டிக் கொள்ள வேண்டிய தேவை உண்டு.

அதாவது இராணுவத் தீர்வு முனையில் அனுருத்தவையும், அரசியல் தீர்வு முனையில் பீரிஸையும் நிறுத்தி அவர்களை ஓலமிட வைத்துக் கொண்டே, தமது பதவிக் காலத்தை பவுத்திரமாகத் தக்க வைத்துக் கொள்வது தான் சந்திரிகாவின் மனதில் உறையும் திட்டம்!

# குழந்தைகளை கடத்தி விற்றதில் இலங்கை கவுன்ஸிலரும் சம்பந்தம்

கொழும்பு, மார்ச் 22

ஜோர்தானில் கைதான இலங்கைக் கவுன்ஸிலர் ஜோர்தானில் உள்ள ஒல்லாந்துதம் பதியினருக்கு சட்ட விரோதமாக இலங்கைக் குழந்தை ஒன்றை எடுப்பித்துக் கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாபிக் அயின் ஹஜி என்பவரே இந்த கவுன்ஸிலர் ஆவார்.

இவர் கைதானது மூலம் இலங்கையில் இருந்து பணிப் பெண் வேலைக்கு செல்லும் பெண்கள் அங்கு சட்ட விரோதமாக பெறும் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது. ஒரு குழந்தை 8 ஆயிரம் முதல் 9 ஆயிரம் டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறதாம்.

குழந்தைகளை கடத்தி ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யும் பாதாள உலகக் கும்பலுடன் இலங்கைக் கவுன்ஸிலர் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-3-6)

## சைக்கிள் ரயர், ரியூப் எடுத்துவர அனுமதிக்குக!

### அரச அதிபர்கள் கோரிக்கை

சைக்கிள்களுக்குத் தேவையான 10 ஆயிரம் ரயர், ரியூப்புக்களை எடுத்து வருவதற்கு அனுமதி அளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவிடம் யாழ்., கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரயர், ரியூப்புக்களை எடுத்துச் செல்ல அரசு விதித்துள்ள தடையால் மக்கள் பெரும் கஷ்டம் அடைவதுடன், கூடுதலான விலைக்கு அவற்றை வாக்க வேண்டியுள்ளது என்று அரச அதிபர்கள் இருவரும் அமைச்சுச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (இ-3)

## மரநிழலில் வகுப்புக்கள்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் மரநிழலில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பமானதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மற்றும் நிரந்தரமானவர்கள் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும்—

இப்பாடசாலை வகுப்பறைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதைத் தொடர்ந்து வகுப்புக்களை ஒழுங்காக நடத்துவது கடினமாக உள்ளது என்றும்—

ஆகவே இடநெருக்கடி காரணமாக வகுப்புக்களை மரநிழல்களிலேயே நடத்தவேண்டியுள்ளது என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-124)

## கொழும்பில் ரூ. 3 லட்சம் பறிகொடுத்த யாழ். தமிழர்!

வெளிநாட்டில் இருந்து பணம் பெறுவதற்காக கொழும்பு சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் திரும்பி வரும் வழியில் மூன்று லட்சம் ரூபாவையும், பெறுமதிமிக்க வானொலிகளையும் பறிகொடுத்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

பொன்னையா அரியசிங்கராசா (வயது 59) தாமோதரம்பிள்ளை நவரத்தினம் (வயது 58) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

இந்த இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா சென்று அங்கிருந்து சிலாபம் சென்று உறவினர் வீட்டில் தங்கி இருந்தனர்.

வெளிநாட்டில் இருந்து வந்த காசை எதிர்பார்த்து வந்த இவர்கள் வந்த காரியம் முடிந்ததும் கடந்த சனிக்கிழமை சிலாபத்தில் இருந்து பஸ்ஸில் வவுனியா புறப்பட்டனர். கொழும்பு வந்து தான் வவுனியா செல்ல வேண்டும்.

இவர்களது பஸ் கொழும்பு பேலிய கொடையில் வைத்து படையினரால் நிறுத்தப்பட்டது. தமிழர்கள் இருவரும் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். வெளிநாட்டுப் பணத்துக்காகவே சிலாபம் வந்ததாக இருவரும் தெரிவித்தனர்.

இவர்களை மறித்து வைத்துக் கொண்டு பஸ்ஸை செல்ல அனுமதித்த படையினர் மற்றும் ஒரு பஸ்ஸை மறித்து இவர்களை ஏற்றினர். இவர்களுடன் சிவில் உடையில் இருவர் ஏறிக் கொண்டனர்.

பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்த சமயம் தம்மை சி.ஐ.டி. பொலீஸார் என்று கூறிக்கொண்ட அந்த சிவில் உடையினர் இருவரும் கோட்டையில் பஸ்ஸை நிறுத்தி அந்த தமிழர்கள் இருவரையும் இறக்கி "ஓட்டோ" ஒன்றில் ஏற்றிச் சென்றனர்.

மறைவிடம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட தமிழர் இருவரும் குளியல் அறை ஒன்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டு அவர்களிடம் இருந்த மூன்று லட்சம் ரூபாவும் வானொலிகளும் பறிக்கப்பட்டன.

மீண்டும் ஓட்டோவில் ஏற்றப்பட்ட அவர்கள் கோட்டை ரயில் நிலையத்தில் இறக்கிவிடப்பட்டனராம்.

அவர்களிடம் பணத்தையும் வானொலிகளையும் அபகரித்தவர்கள் அவர்களின் பயணச் செலவுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுத்தனர் என்று கூறப்படுகிறது. (இ)

## லங்கா கல்யாணி நாளை வரும்

வடமராட்சி, மார்ச் 22

ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களுடன் லங்கா கல்யாணி கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-173)

## தாண்டிக்குளம் வரையிலான ரயில் நிறுத்தம்

கிளிநொச்சி, மார்ச் 22

கொழும்பில் இருந்து தாண்டிக்குளம் வரையிலான ரயில் சேவை வவுனியா ரயில் நிலையத்துடன் தற்போது நிறுத்தப்படுகின்றது.

இதேவேளை வடபகுதிக்கு வரும் தென்பகுதி பயணிகள் பிறவுண் கம்பனி பொலீஸ் சோதனை நிலையத்தில் பாஸ் பெறவேண்டும் என்ற நடைமுறையும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் இருந்து வடபகுதி வரும் பயணிகள் வவுனியா ரயில் நிலைய பொலீஸ் சோதனை நிலையத்தில் பாஸ் பெற்று அதனை தாண்டிக்குள சோதனை நிலையத்தில் ஒப்படைத்து விட்டே வடபகுதி வரவேண்டும். (இ-76)

# தமிழீழ வானொலி

வெள்ளி மாலை

- ★ 5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — உயிராயுதம்
- ★ 5-30 — நாடகம்
- ★ 5-45 — நேயர் கடிதம்
- ★ 6-00 — புதியவை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — இவ்வாரம் இவர்
- ★ 6-30 — ஒலிபரப்பு நிறைவு

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

வெள்ளி இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — கலை மஞ்சரி
- ★ 8-20 — அரசியல் அரங்கம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப் பாடல்கள்

சனி காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை எழுச்சி கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த 93/95, 94/96 ஆம் ஆண்டுகளுக்குரிய பயிலுநர் ஆசிரியர்களு கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இயங்கும் வலயம் இரண்டின் அலுவலகத்தில் நடைபெறும் என்று வலயம் இரண்டின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் போர்க்கால கருத்தரங்கு

கிளிநொச்சி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கான போர்க்காலக் கருத்தரங்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி கலையரங்கில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (இ-76)

## வெற்றிடங்களை நிரப்ப கிராம சேவையாளர்கள் தரம் II போட்டிப் பரீட்சை

கொழும்பு, மார்ச் 22

கிராம சேவையாளர் தரம் IIக்கு ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வெற்றிடங்கள் நிலவும் கிராம சேவையாளர் பிரிவுக்கு தகுதிவாய்ந்தவர்களை நியமிப்பதற்கு இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

★ 21—40 வயதுக்கு இடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ மொழித்திறன், பொது அறிவும் – நுண்ணறிவும் என இரு பாடங்களில் பரீட்சை நடைபெற்று தெரிவான பரீட்சார்த்திகள் இன விகிதாசார அடிப்படையில் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

★ பரீட்சையில் ஒரே புள்ளியைப் பலர் பெற்றால் அமைச்சே இறுதித் தீர்மானமெடுக்கும்.

★ விண்ணப்ப முடிவு திகதி 15-4-96 ஆகும்.

அதேசமயம் தற்போது கிராம சேவகர் தரம் IIஇல் உள்ளவர்களைத் தரம் Iற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவை பற்றிய மேலதிக விவரங்கள் 08 - 03 - 96 இல் வெளியான அரச வர்த்தமானியில் வெளியாகியுள்ளன. (இ-ரி-3-7)

# பல்கலை அனுமதி கிடைக்காதோர் இப்போது விண்ணப்பிக்கலாம்

பல்கலைக்கழகங்களுக்கு 95/96 கல்வியாண்டுக்காக விண்ணப்பித்து தகுதி இருந்தும் அனுமதி கிடைக்காத மாணவர்கள் அதுபற்றிய முறைப்பாட்டுக் குழுவுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் போதிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 9 ஆயிரத்து 800 மாணவர்கள் இந்த கல்வியாண்டுக்கு அனுமதி பெற்றிருந்தனர்.

போதிய புள்ளிகளைப் பெற்று குறிப்பிட்ட கற்கை நெறி ஒன்றுக்கு விண்ணப்பித்து எந்த கற்கை நெறிக்கும் தெரிவு செய்யப்படாத, ஆனாலும் தெரிவுத் தகுதி என்று கருதுமிடத்து—

தெரிவு செய்யப்பட்டும் தம்மால் கோரப்பட்ட கற்கை நெறிக்கு தெரிவு கிடைக்காதவிடத்து—

தாம் ஏற்கனவே கோரிய துறைக்குத் தகுதி என்று கருதுமிடத்து—

[illegible] கற்கை நெறிகளுக்கு [illegible] தெரிவு செய்யப்பட்டிருப்பின்—

முறைப்பாட்டுக் குழுவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

முறைப்பாடு செய்வோர் தாம் தோற்றிய ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் சுட்டிலக்கம், மாவட்டம், தோற்றிய பாடங்கள், பெற்றுக் கொண்ட மொத்தப்புள்ளிகள் ஆகிய விவரங்களை உள்ளடக்க வேண்டும்.

இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக்கொண்ட 50 ரூபாவுக்கான பற்றுச் சீட்டுடன் முறைப்பாடுகள் அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH
WITH GRAMMAR

HARY'S INSTITUTE
(Kondavil)
Syamala Mill Lane, Meesalai.
(புத்தூர் சந்திக்கு அருகாமையில்)

Lectures by:
Mr. M·A· HARI (B.A. Dip. in Eng.)

★ புதிய பிரிவு ஆரம்பம்:
03 - 04 - 1996 3-00 p.m.

★ ஏற்கனவே எம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும்.
★ பல்கலைக்கழக அனுமதி பெற்று செல்லும் மாணவர்களுக்கு விசேட பிரிவு ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

மு.குறிப்பு: சகல மாணவர்களும் தங்களுக்குரிய அனுமதிகளை 22-03-1996 காலை 9-00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளவும்.

(41189) DIRECTOR


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா பொன்னம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா பொன்னம்மா 20- 03- 96 அன்று கிளிநொச்சியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும், நாகராசா (கெமிக்கல் — பரந்தன்), திருநாவுக்கரசு (கடை — கிளிநொச்சி), தனபாலசிங்கம் (பாலன்ஸ் கபே — சந்தை உட்புறம், சாவகச்சேரி), தர்மராசா (ஆசிரியர் — இந்துக்கல்லூரி, சாவகச்சேரி), சந்திராதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், தங்கம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் மைத்துனியும், திருமங்களநாயகி (ஆசிரியை —டிறிபேக் கல்லூரி, சாவகச் சேரி), சரஸ்வதி, மகேஸ்வரி, திருமோகனராதா, வரதலிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி ச. தங்கேஸ்வரி
(பெறாமகள்)

கல்றெக்ஸ் லேன்.
கண்டி வீதி,
சாவகச்சேரி.

[4108]7

## மாணிக்கம் இராமநாதன்

அல்வாய் கிழக்கு, தெருமூடிமடத்தடியைச் சேர்ந்த மாணிக்கம் இராமநாதன் 19-3-1996 அன்று கொழும்பில் காலமானார். இவர் அருந்ததியின் அன்புக் கணவரும், இரவீந்திரன், திருமதி நளாயினி, இராமராவ், அனுஷியா, கஸ்தூரி, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், நரேந்திரன், கோபால கிருஷ்ணன், சபாரத்தினம், திருமதி கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. பொ. வேணுகோபால் (உதவிக் கல்விப் பணிப்பாளர் — வவுனிக்குளம்), திருமதி செல்வதி சபாரத்தினம் ஆகியோரது அன்பு மைத்துனரும், சபாபதி தேவராஜாவின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 22-03-96 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருந்ததி இராமநாதன்
(மனைவி)

தெருமூடி மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(40366)

## திருமதி நாகம்மா செல்லையா

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாக கொண்டவரும், கனடாவில் வசித்தவருமான திருமதி நாகம்மா கனடாவில் 16 - 03 - 96 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற வேலுப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் பராசத்தி (பவளம்—கனடா), தங்கராசா (மட்டுவில் தெற்கு), விஜயலட்சுமி (இலட்சுமி—கனடா), இராசமணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மார்க்கண்டு (கனடா), அன்னபூரணம் (அரியம்), படைவீரசிங்கம் (கனடா) காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. தங்கராசா
(மகன்)

''பூரணபவனம்''
மட்டுவில் தெற்கு.

(41073)

### தேங்காய்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ந்து இனி வரும் கப்பல்களிலும் தேங்காய்ப் பால்மாவை எடுத்து வந்து விநியோகிக்க ஏற்பாடாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

### நாச்சிக்குடா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே பூநகரி நாச்சிக்குடாவில் அப்பாவிப் பொதுமக்கள் மீது இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். (உ-6-7)

### கடந்த பத்து நாள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம். படையினரின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வராத பகுதிகளில் நடமாடும் போது மிக அவதானமாக இருக்கும்படி துருப்புக்களுக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றோம்.''— என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்டன. (உ)

### ஜி.சீ.ஈ. மாணவர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் தமது விவரங்களை தத்தமது பாடசாலை அதிபர்களிடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக வழங்குமாறு கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சையை மிக விரைவாக நடத்துவதற்கு இந்த விவரங்கள் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் —

அதிபர்கள் இந்த விவரங்களின் தொகுப்பை கல்வித் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் — வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி கல்வித் திணைக்கள வட்டாரத்தில் உள்ள இடம்பெயர்ந்த மாணவர் விவரங்களைத் திரட்ட ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

### ஜி.சீ.ஈ. சாதாரண..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுமாணவர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுவதுடன், இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது தற்போதைய வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள வலயம் ஒன்று, வலயம் இரண்டு பாடசாலைகளில் தமது பெயர்களைப்பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் —

இவர்களுக்கான வகுப்புகளை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியளவில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் —

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலை அதிபர்கள் அம்மக்களை விரைவில் மீளக்குடியமர்த்த உரியவர்களுடன் தொடர்பு கொண்டு ஏனைய வகுப்புகளை ஆரம்பிக்கலாம் எனவும் —

வலயம் ஒன்று, வலயம் இரண்டு கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (இ-7)


யூப்பிட்டர் கல்வி நிலையம்

சங்கத்தானை — சாவகச்சேரி
★ தென்மராட்சி ★ வடமராட்சி ★ யாழ். நகர் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

- A/L - 96. 97 கலை, வர்த்தகப் பிரிவுகள்
- O/L - 96. 96 மீட்டல் வகுப்புகள்
- ஆண்டு - 5 புலமைப்பரிசில் வகுப்புகள்
- ஆண்டு - 4 — 11 வரையிலான வகுப்புகள்
- Spoken English ஆகியன 01 - 04 - 96 முதல் ஆரம்பமாகின்றன.

★ உங்கள் அனுமதிகளை 01-04-96 க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

(சி/4130) நிர்வாகி



பணிநிலை வெற்றிடங்கள்

விரைவில் மாங்குளம் பகுதியில் செயற்படவிருக்கும் தனியார் மருத்துவமனைக்கு கீழே குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 23-03-1996 சனி, 24-03-1996 ஞாயிறு ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரை சாவகச்சேரி மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு உரிய ஆவணங்கள், சான்றிதழ்களுடன் நேரில் சமுகந்தரவும்,

பணிநிலைகள்

★ மருத்துவர் — (M.B.B.S.) or (R.M.P.)
★ பல் மருத்துவர் — (Dental Surgeon)
★ பல் தொழில் நுட்பவியலாளர் — (Dental Technician)
★ தாதிகள் — (Nurses)
★ சத்திரசிகிச்சைக் கூட தாதியர் — (O.T. Nurses)
★ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் — (M.L.T.)
★ மருத்துவ மாது — (Midwife)

★ அனுபவமுடையவர்கள் விரும்பத்தக்கது
(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நோயாளர் நலன்புரிச் சங்கம்
சாவகச்சேரி
(41069)


யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த

ஒய்வூதியர்களுக்கான

## முக்கிய அறிவித்தல்

வலிகாமப் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது, யாழ். குடாநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் தங்களது எதிர்கால ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களை நேரடியாக தாங்கள் தற்பொழுது தங்கியிருக்கும் தற்காலிக வதிவிடங்களிலேயே தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, தயவுசெய்து பின்வரும் விவரங்களை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் யாழ். செயலகத்திற்கு கடிதம் மூலம் அனுப்பிவைக்கவும்.

★ ஓய்வூதியரின் பெயர்:-
★ ஓய்வூதிய இலக்கம்:-
★ ஓய்வூதியம் பெறும் வங்கி:-
★ முன்னைய விலாசம்:-
★ இடம்பெயர்ந்து தற்போது தங்கியிருக்கும் தற்காலிக விலாசம்:-

பழைய தபால் நிலையங்கள் மூலம் எவ்வித விநியோகமும் எதிர்காலத்தில் நடைபெறமாட்டா என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

(சி/4131)

# மரண அறிவித்தல்

## E. N. கிருபைரட்ணம்

சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. E. N. கிருபைரட்ணம் (ஓய்வு பெற்ற O. A. பால்சபை) 21-3-1996 இல் காலமாகி விட்டார். அன்னார் தேவமலரின் அன்புக் கணவரும், வோல்டர், ஜோய், சாம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சன், தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும் மார்க், திமெத்தி, அன்றாவெய்த் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் அன்று பி. ப. 4 மணிக்கு நடைபெற்றது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மலர் (மனைவி)

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி,

(41074)


வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...

திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் நிதர்சனமும்,
விடுதலைப்புலிகள், கலை பண்பாட்டுக் கழகமும்
இணைந்து வழங்கும்

'பிஞ்சு மனம்'

ந. கேசவராஜனின் "திசைகள் வெளிக்கும்"

(முழுநீள வண்ணப்படம்)

(சி/4119)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகபணிமனையில் 22-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.